www.Padasalai.Net

பள்ளிக் கல்வித் துறை
தலைமைச் செயலகம்,
சென்னை-600 009.

**கடித எண்.3919/ப.க.4(1)/2024-2, நாள் 29.10.2024**

அனுப்புநர்
திருமதி சோ.மதுமதி, இ.ஆ.ப.,
அரசு செயலாளர்.

பெறுநர்
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்/
சார் கருவூல அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர் சென்னை-600 001/600 003/600 035.
சம்பந்தப்பட்ட சம்பளக் கணக்கு அலுவலர்கள்.

ஐயா,

பொருள் பள்ளிக் கல்வி - 2012-2013-ம் ஆண்டு அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டம் - நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்பட்டது - 4393 ஆய்வக உதவியாளர் பணியிடம் மற்றும் 1764 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் ஆக மொத்தம் 6157 தற்காலிக பணியிடங்களுக்கு 19.11.2024 முதல் 18.02.2025 வரை மூன்று மாதங்களுக்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்குதல் - தொடர்பாக.

பார்வை
1. அரசாணை (நிலை) எண்.277, பள்ளிக் கல்வி (சி.2) துறை, நாள் 30.10.2012.
2. அரசாணை (நிலை) எண்.62, பள்ளிக் கல்வி (அகஇ) துறை, நாள் 16.05.2014.
3. அரசாணை (1டி) எண்.87, பள்ளிக் கல்வி (ப.க.4(1)) துறை, நாள் 21.06.2021.
4. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண்.006743/எல்/இ3/2021, நாள் 14.02.2024.
5. அரசு கடித எண்.3919/ப.க.4(1)/2024-1, நாள் 29.05.2024.
6. பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க. எண்.006743/எல்/இ3/2021, நாள் 17.10.2024.

**********

பார்வை ஒன்றில் காணும் அரசாணையில், அனைவருக்கும் இடைநிலைக் கல்வித் திட்டத்தின் கீழ் 2011-2012-ஆம் ஆண்டில் அனுமதிக்கப்பட்டவாறு ஏற்கனவே இயங்கி வரும் உயர்நிலைப்

www.Padasalai.Net

பள்ளிகளுக்கென ரூ.4800-10000 + தர ஊதியம் ரூ.1300/- என்ற விகிதத்தில் 4393 ஆய்வக உடனாள் பணியிடங்கள் மற்றும் ரூ.5200-20200 + தரஊதியம் ரூ.2400/- என்ற ஊதிய விகிதத்தில் 1764 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் ஆக மொத்தம் 6157 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

2. பார்வை இரண்டில் காணும் அரசாணையில், ஆய்வக உடனாள் என்ற பணியிடம் ஆய்வக உதவியாளர் என்ற பணியிடமாக மாற்றி ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பார்வை மூன்றில் காணும் அரசாணையில், 6157 பணியிடங்களுக்கு 19.02.2021 முதல் 18.02.2024 வரை 3 ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு ஆணை வெளியிடப்பட்டுள்ளது. பார்வை நான்கில் காணும், பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண்.006743/எல்/இ3/2021, நாள் 14.02.2024-இல், மேற்காணும் பணியிடங்களுக்கு 19.02.2024 முதல் 18.05.2024 வரை மூன்று மாதங்களுக்கு விரைவு ஊதியக் கொடுப்பாணை (Express Pay Order) வழங்கப்பட்டுள்ளது.

3. பார்வை ஐந்தில் காணும் அரசு கடித எண்.3919/ப.க.4(1)/2024-1, நாள் 29.05.2024-இல், 19.05.2024 முதல் 18.11.2024 வரை ஆறு மாதங்களுக்கு தொடர் நீட்டிப்பு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorisation) வழங்கப்பட்டுள்ளது.

4. பார்வை ஆறில் காணும் பள்ளிக் கல்வி இயக்குநரின் கடிதத்தில், அரசாணை (1டி) எண்.87, பள்ளிக் கல்வி (ப.க.4(1))த் துறை, நாள் 21.06.2021-ல், 6157 பணியிடங்களுக்கு 19.02.2021 முதல் 18.02.2024 வரை 3 ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு ஆணை வழங்கப்பட்டு முடிவடைந்தும், 19.02.2024 முதல் 18.05.2024 வரை மூன்று மாதத்திற்கு தற்காலிக தொடர் நீட்டிப்பு (Express pay order) பள்ளிக் கல்வி இயக்குநரால் ஆணை வெளியிடப்பட்டும், அரசு கடித எண்.3919/ப.க.4(1)/2024-1, நாள் 29.05.2024-ல், 19.05.2024 முதல் 18.11.2024 வரை ஆறு மாதங்களுக்கு தொடர் நீட்டிப்பு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorisation) வழங்கப்பட்டு முடிவடையவுள்ள நிலையில், தற்காலிக பதவியை தொடர வேண்டியதன் அவசியத்தை ஆராய அரசாணை (நிலை) எண்.271, நிதித்துறை (CMPC), நாள் 18.08.2022-இன்படி அமைக்கப்பட்ட குழுவால் இப்பணியிடங்களை நிரந்தரம் செய்து அரசாணை வெளியிடப்படவுள்ள நிலையில், 19.11.2024 முதல் 18.05.2025 வரை ஆறு மாதங்களுக்கு ஊதியக் கொடுப்பாணை (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

5. பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை ஏற்று, மேற்குறிப்பிட்டுள்ள 4393 ஆய்வக உதவியாளர் பணியிடங்கள் மற்றும் 1764 இளநிலை உதவியாளர் பணியிடங்கள் ஆக மொத்தம் 6157 பணியிடங்களுக்கு 19.11.2024 முதல் 18.02.2025 வரை மூன்று மாதங்களுக்கு ஊதியக்

www.Padasalai.Net

கொடுப்பாணை (Pay Authorisation) வழங்கப்படுகிறது. மேற்படி அலுவலர்களுக்கான சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியப் பட்டியல்கள் உரிய அலுவலர்களால் சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் ஏற்றுக் கொண்டு ஊதியம் பெற அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

6. இக்கடிதம் இத்துறையின் மின் கோப்பு எண் (e-file).3919/ப.க.4(1)/ 2024-2, நாள் 26.10.2024-ன்படி நிதித்துறையிடம் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள,

(signature) 29.10.2024

(அரசு சார்புச் செயலாளர்)

அரசு செயலாளருக்காக.

29/10/24

நகல்

பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை-600 006.

மாநிலக் கணக்காயர், சென்னை-600 018/600 035.

நிதி (கல்வி-II)த்துறை, சென்னை-600 009.

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

நகல்: இவ்வியக்கக ந.க.எண்: 006743/அவ3/இ3/21 நாள்: 30.10.2024

தகவலுக்காகவும் தக்க நடவடிக்கையின் பொருட்டு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கு அனுப்பப்படுகிறது,

(signature) 30/10/24

இணை இயக்குநர்க்காக:

பெறுநர்:

அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்,

(signature) 30/10/24